## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.

OS.No. 8/2017 பெயர்- திரு. அமரன் நாள்.02.09.2024

இடை மனு எண்.4/2024 அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை-**

ஓதிமலை சுப்பிரமணியர் மற்றும் கைலாசநாதர் கோவிலுக்கு எனது தகப்பனார் பரம்பரை அறங்காவலராக இருந்தார். எனது தகப்பனார் என்னை மேற்படி கோவில்களுக்கு அறங்காவலராக நியமனம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கோயமுத்தூர் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் நீதிமன்றத்தில் M.P.No.13/2017 வழக்கை பரம்பரை அறங்காவலராக என்னை நியமனம் செய்யக் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு தற்போது வரை நிலுவையில் உள்ளது.

15.09.1935 தேதியிட்ட டிரஸ்ட் ஒப்பந்தத்தை எழுதிக் கொடுத்த அழகிரிசாமி ஐயர், கரிவரதராஜபெருமாள் கோவில் அறங்காவலர் என்ற உரிமையை மெட்ராஸ் இந்து சமய அறநிலைய போர்டு கமிஷனர் நீதிமன்றத்தில் O.A.No.397/1934 என வழக்கு தாக்கல் செய்து தான் பரம்பரை அறங்காவலர் என்ற உரிமையை பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

இவ்வழக்கின் 2 முதல் 4 பிரதிவாதிகள் மேற்படி O.A.No.397/1934 வழக்கு பற்றி எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள் என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் ஞாபகம் இல்லை. O.A.No.397/1934 வழக்கில் பரம்பரை அறங்காவலர் என்ற உரிமையை பெற்றுள்ள அழகிரிசாமி ஐயர் முதல் மரியாதை மற்றும் மிராசு உரிமைகளை தனது வேண்டிய நபர்களுக்கு கொடுக்க உரிமையற்றவர் என்றால் சரியல்ல.

15.09.1935 தேதிய டிரஸ்ட் ஒப்பந்தத்தில் எங்கள் சமுதாயம் உட்பட 13 நபர்கள் இந்து சமய அறநிலைத்துறை போர்டு நீதிமன்றத்தில் இந்து சமய அறநிலை சட்டம் 1927 சட்டபிரிவு 79(A) ன் கீழ் வழக்கு தொடுத்து தான் கோவில் சம்பந்தபட்ட மிராசு உரிமைகளை பெற வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

15.09.1935 தேதிய டிரஸ்ட் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள எங்கள் சமுதாயம் உட்பட 13 நபர்கள் மிராசு உரிமைகளை பெறுவதற்காக வழக்கு எதுவும் தொடரவில்லை என்றால் சரிதான். O.A.No.397/1934 வழக்கிலும், கோபி உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.529/1934 வழக்கிலும் நாங்கள் தரப்பினர்களாக சேரவில்லை என்றால் எனக்கு தெரியாது. இதனால் அழகிரிசாமி ஐயர் தன்னிச்சையாக 1935 டிரஸ்ட் ஒப்பந்ததின் மூலம் நாங்கள் சார்ந்துள்ள 12 நபர்களுக்கு விழாக்களில் முதல் மரியாதை மற்றும் மிராசு சம்மந்தமாக எழுதிக் கொடுத்துள்ளது சட்டபடி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ஆவண எண்.34/1935 ஐ எனது தாத்தா உள்ளிட்ட எத்தனை நபர்களுக்கு அழகிரிசாமி ஐயர் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் 13 நபர்களுக்கு எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். மேற்படி ஆவணத்தில் அழகிரிசாமி ஐயர் பூஜை வகையறா செய்து கொண்டு வருகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் வா.சா.ஆ.1 படித்து பார்த்து சரிதான் என்று சாட்சியம் அளிக்கிறார். மேற்படி ஆவணத்தில் எந்த இடங்களிலும் பரம்பரை அறங்காவலர் என்ற வாசகம் வரவில்லை என்றால் ஞாபகமில்லை.

அதனால், மேற்படி வா.சா.ஆ.1 ஐ எழுதிக் கொடுப்பதற்கு அழகிரிசாமிக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. காரணம் இத்திருக்கோவிலும், திருக்கோவிலுக்கு சம்மந்தப்பட்ட இடங்களும் இந்து சமய அறநிலைத்துறைக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அரசுக்கு சொந்தமான இத்திருக்கோவிலில் உள்ள பொருட்களை மற்றும் சொத்துக்களை அறங்காவலர் மற்றும் பரம்பரை அறங்காவலராக இருந்தாலும் நிர்வாகம் மட்டுமே செய்துவர இயலும் என்றும், அது இல்லாமல் அங்குள்ள கட்டிடங்களை இடிப்பதற்கோ மாற்றம் செய்வதற்கோ எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

இத்திருக்கோவிலும் வா.சா.ஆ 1 ஆவணத்தின் படி மண்டபமும், நந்தவனமும் உள்ளது என்பதை குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி மண்டபத்தை இடித்து மாற்றம் செய்யும் பொழுது எவ்வித அனுமதியும் அரசிடமிருந்து நாங்கள் பெறவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தானது அரசுக்கு சொந்தமானது என்றும், எவ்வித தனிப்பட்ட நபர்களுக்கும் தனிப்பட்ட உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**